3. அறிவிப்புகள்.

(அ) உறுப்பினர்கள் கைது செய்யப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு,

"I have been informed by the Commissioner of Police, Madras, to the effect that Thiruvalargal K. Anbazhagan, S. Balan, P. Ponnurangam, A. Selvarasan and Parithi Ilamvazhuthi, Members of the Legislative Assembly have been arrested on the afternoon of 17th November 1986 under Section 143 I.P.C. 41 Madras City Police Act, Section 2 of the Prevention of Insults to National Honour Act, 1971 read with 7 (1) (a) Criminal Law Amendment Act, when they assembled in violation of the prohibitoray orders in force in the City and burnt Part XVII of the Constitution of India pertaining to the Official Language of the Union to condemn the alleged imposition of Hindi by the Centre.

Thiruvalargal K. Anbazhagan, S. Balan and Parithi Ilamvazhuthi were remanded till 1st December 1986 and Thiruvalargal A. Selvarasan and P. Ponnurangam were remanded till 28th November 1986 and ledged in the Central Prison, Madras on 17th November 1986."

(ஆ) அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவையில் (Senate) இச்சட்டமன்றப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருக்கும் திருவாளர்கள் (1) அ. தங்கராசு, (2) ஆர். தியாகராசன், (3) பி. என். ராமச்சந்திரன் ஆகியோரின் பதவிக் காலம், 1986 டிசம்பர் மாதம் 5-ஆம் தேதியுடன் முடிவடைவதால் அப்பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றை மாற்று வாக்குமூலம் இத்தேர்வு நடைபெறும்.

1986 நவம்பர் 18] [பேரவைத் தலைவர்]

எனவே, வேட்பாளர்கள் நியமனத்தாட்களை 19-11-1986 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 20-11-1986 வியாழக்கிழமை காலை 11-00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 20-11-1986 வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது மூன்றுக்கு மேற்படுமாயின் 22-11-1986 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(இ) கவன ஈர்ப்பு தள்ளிவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க திரு. செ. செம்மலை அவர்கள் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம் வேறு ஒரு நாள் எடுத்துக்கொள்ளப்படும்.

4. கவன ஈர்ப்பு.

திருச்சி மாவட்டம், துறையூரில் கதர் வாரிய கண்டசாரி சர்க்கரை ஆலைக்குக் கரும்பு கொடுத்த விவசாயிகளின் பாக்கிகளைத் தீர்த்து வைத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் வி. தங்கவேலு, இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

(திருவாளர்கள் வி. தங்கவேலு, இரா. தாமரைக்கனி ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால், திரு. என். எஸ். வி. சித்தன் அது குறித்து அமைச்சரின் கவனத்தை ஈர்க்க அனுமதிக்கப் பட்டார்.)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " திருச்சி மாவட்டம், துறையூரில் கதர் வாரியத்தின் மூலம் இயங்கி வந்த கண்டசாரி சர்க்கரை ஆலைக்குக் கரும்பு கொடுத்த விவசாயிகளுக்குப் பணம் கொடுக்கப்படாத